# 37

# பரிசேயர்களிடம் எதிர்வாதம்

## (15:1-20)

*அதிகாரம் 15 தொடர்ந்து இயேசுவிடமும் அவரது ஊழியத்தைக் குறித்தும் ஜனங்கள் கொண்டிருந்த எதிர்ச் செயல்களின் சிறப்புக் கூறுகளை காட்டுகிறது. பரிசேயர்களுடனான எதிர்வாதத்துடன் துவங்குகிறது, அவர்கள் மனிதப் பாரம்பரியங்களை இயேசுவின் மேலும் அவருடைய சீஷர்கள் மேலும் சுமத்த முயற்சித்தார்கள் (15:1-20). பிறகு பெனிக்கேயா கடற்கரைக்குப் பின்வாங்கிய பின்பு, இயேசு, தனது மகளுக்கு சுகமளிக்கும்படிக் கேட்ட ஸ்திரீயைச் சந்திக்கிறார். அவர் அவளைப் புகழ்ந்து அவள் கொண்டுள்ள பெரிதும், தணியாததுமான விசுவாசத்தைப் பாராட்டினார் (15:21-28). இயேசு கூட்டாத்தாரில் செய்யும் அற்புதத்துடன் அதிகாரம் நிறைவுபெறுகிறது (15:29-39). அவர்களுடைய வியாதிகளை அவர் சுகமாக்கிய காரியம் இஸ்ரவேலின் தேவனை ஜனங்கள் துதிக்கும்படி செய்தது. இரக்கங் கொண்டதால், இயேசு தம்மைப் பின்பற்றின திரளான கூட்டமாகிய, நான்காயிரம் புருஷர்கள் உட்பட போஷிக்கப்பட்டனர்.*

## மனிதக் கற்பனைகளுக்கு எதிரிடையாக தேவனுடைய கற்பனை *(15:1-9)*

***1** அப்பொழுது எருசலேமிலிருந்து வந்த வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவினிடத்தில் வந்து:*

***2** உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை ஏன் மீறி நடக்கிறார்கள்? கைகழுவாமல் போஜனம் பண்ணுகிறார்களே! என்றார்கள்.*

***3** அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்?*

***4** உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்றும்; தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்படவேண்டும் என்றும், தேவன் கற்பித்திருக்கிறாரே.*

***5** நீங்களோ, எவனாகிலும் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: உனக்கு நான் செய்யத் தக்க உதவி எது உண்டோ, அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி, தன் தகப்பனையாவது தன் தாயையாவது கனம் பண்ணாமற்போனாலும், அவனுடைய கடமை தீர்ந்ததென்றும் போதித்து,*

***6** உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கி வருகிறீர்கள்.*

***7** மாயக்காரரே, உங்களைக் குறித்து:*

***[8]இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால், என்னைக் கனம்பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது;***

***[9]மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்.***

***வசனம் 1. இயேசுவின்*** *புகழ் தொடர்ந்து பரவுகிறது, கலிலேயாவிலிருந்த ஏரோது அந்திப்பாவின் கவனத்தைக் தம்பக்கம் திருப்பினது மட்டுமல்ல, (14:1, 2)* ***எருசலேமில்*** *இருந்த யூதமத தலைவர்களின் கவனத்தையும் தான். தமது ஊழியத்தின் துவக்கத்திலிருந்து, இயேசு எருசலேமிலிருந்து சிலர் தம்மைப் பின்பற்றும்படி செய்திருந்தார் (4:25). இந்த நேரத்தில் அவர் பரிசுத்த நகரத்திற்கு குறைந்த பட்சம் இரண்டு முறை போய் ஊழியம் செய்து விட்டார் (யோவான் 2:13; 5:1).*

*எருசலேமிலிருந்த தலைவர்கள் பிரதிநிதிகளை அனுப்பி இயேசு பலஸ்தீனாவில் நடப்பித்த பல்வேறு செயல்பாடுகளைக் குறித்து விசாரித்துவர அனுப்பினார்கள் (காண்க யோவான் 1:19-28). இதற்கு முன்பு, அவர் கலிலேயாவிலிருந்த உள்ளூர் தலைவர்களை கலங்கடிக்கும்படிக்கு ஆயக்காரர்களோடும் பாவிகளோடும் உணவருந்தி, ஓய்வு நாளின் பாரம்பரியங்களை மீறி நடந்தார் (9:11, 34; 12:2, 14). மேலும் தம்மிடத்தில் கொண்டு வரப்பட்ட மனிதனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று அறிவித்து அவர்களைக் கோபப்படுத்தியிருந்தார் (9:2, 3). ஆகையால், இயேசுவின் உபதேசம் தங்களுக்கு ஒரு பயமுறுத்தலானது எனும் கோணத்தில் பார்த்த அவர்கள், எருசலேமிலிருந்து தலைவர்கள் ஒரு கூட்ட கலியேயர்களை அனுப்பி அவரை அவமதிக்க முயற்சித்தனர். மாற்கு எழுதியுள்ளபடி, இதற்கு முன்பு ஏற்பட்ட ஒரு முரண்பாடு - இயேசு பெயெல்செபூலினால் பிடிக்கப்பட்டிருந்ததாக சாட்டிய குற்றச்சாட்டு கூட - எருசலேமைச் சார்ந்து வந்த ஒரு காரியம்தான் (மாற்கு 3:22; காண்க மத்தேயு 9:34; 12:24). இந்த யூதத் தலைவர்கள் கடந்த காலங்களில் தாங்கள் எடுத்த பிரயாசங்களை விட, இப்போது வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையில் இருந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.*

*எருசலேமிலிருந்து அனுப்பப்பட்டவர்களில் சிலர்* ***வேதபாரகர்கள்.*** *இந்த மனிதர்கள் பழைய ஏற்பாட்டையும், வேறு பல பதிவு ஏடுகளையும் நகல் எடுப்பவர்களாக இருந்தனர். பரிசுத்த வேத எழுத்துகளில் அதிகமான பழக்கமுள்ளவர்களாய் இருந்தமையால் அவர்களே அதன் பிரதான விளக்கவுரையாளர்களாயினர் (2:4; 5:20; 7:29). அவர்கள் "நியாய சாஸ்திரி [கள்]" என்றும் அழைக்கப்பட்டனர் (22:35) "நியாயப்பிரமாண போதகன்" என்றும் கூட அழைக்கப்பட்டனர் (லூக்கா 5:17). அவர்களுடைய வேலையை வைத்து, அவர்களின் நியாயப்பிரமாணத்தின் அறிவு அறியப்பட்டிருந்தது.*

***பரிசேயர்கள்*** *("பிரித்தெடுக்கப்பட்டவர்கள்") யூதர்களிலே மிகப் பெரிய பிரிவினராக இருந்த இவர்கள் (காண்க 23:1-10) தங்கள் நாட்களில் எழுதப்பட்ட பிரமாணத்தையும் வாய்மொழி பாரம்பரியத்தையும் பற்றிக் கொண்டிருந்தார்கள். அந்தியோகஸ் எபிபானேஸ் என்பவன் காலத்தில்*

அவர்கள் கிரேக்க கலாச்சாரம் யூதர்களுக்குள் நிலை நாட்டப்படுவதை எதிர்த்தார்கள்.[1] அவர்கள் சதுசேயரின் நம்பிக்கைக்கு எதிராக பொதுவான உயிர்த்தெழுதல் கொள்கையையும் ஆத்துமாவின் அழியாத்தன்மையையும் பற்றிக் கொண்டிருந்தனர். வருங்கால பிரதிபலன் மற்றும் ஆக்கினை பற்றிய உபதேசத்தையும் விசுவாசித்தார்கள் (நடபடிகள் 23:8; காண்க 3:7ன் விளக்கவுரை). எல்லா பரிசேயர்களும் வேதபாரகர்களாயிருந்திராவிட்டாலும், பெரும்பாலான வேதபாரகர்கள் பரிசேயக் கட்சி உறுப்பினர்களாயிருந்தனர்.[2]

**வசனம் 2.** வேதபாரகரும் பரிசேயரும் கேட்ட கேள்வி தகவல் அறிந்து கொள்வதற்காக வேண்டுதலாய் கேட்டதாயிராமல் குற்றப்படுத்தும் எண்ணமாகவே இருந்தது. ஒருமுறை, சடங்காச்சாரமாக இயேசு கைகழுவாமல் சாப்பிட்டதைப் பார்த்து ஒரு பரிசேயன் ஆச்சரியமடைந்தான் (லூக்கா 11:38).

ரபீகள் தங்களுடைய மாணவர்களின் நடத்தைகளுக்கு பொறுப்பாளிகள் என்பதுபோல் பார்த்தனர் என்பதால், சீஷர்களின் செயல்களுக்கு இயேசு குற்றப்படுத்தப்பட்டார் (காண்க 9:14; 12:2). சீஷர்களின் நடத்தைகளும் செயல்களும் இயேசுவின் போதனை மற்றும் முன் மாதிரியோடு சம்பந்தப்பட்டிருக்கக் கூடும் என்பதில் சந்தேகமில்லை. நெடுங்காலமாக கைக்கொண்டு வந்த பாரம்பரியத்தை அவர்கள் எதிர்த்து நிற்கவேண்டியிருந்ததால், அவர்களுடைய செயல்கள் முன் யோசனையற்றதாகவோ அல்லது பெலவீனமானவைகளாகவோ இருந்திருக்க வாய்ப்பில்லை, மாறாக இயேசு அவர்களுக்குப் போதித்த உபதேசத்தின் அடிப்படையில் வளர்ந்த எண்ணங்களே மனமுவந்து எதிர்கிரியை செய்ய வைத்தது. கோட்பாடுகளின் குறிக்கோளுடன் அவர்கள் செய்தவை, அறிந்து செய்தவைகள், ஏதோ உதாசீன எண்ணத்தோடல்ல. குறைந்தபட்சம், வேதபாரகரும் பரிசேயரும் இந்த வகையில்தான் வழக்காடியிருக்கக் கூடும்.[3]

பரிசேயரும் வேதபாரகரும் **முன்னோர்களின் பாரம்பரியங்களைத்** தங்களுடைய தீர்ப்பின் அளவு கோலாகக் கொண்டிருந்தனர். "பாரம்பரியம்" (*paradosis*) எனும் பதம் ஒருவருக்கு "கையளிக்கப்பட்ட" அல்லது "ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு கடந்து போன" போதனைகள் என்று பொருள். "முன்னோர்களின் பாரம்பரியம்" என்பது வசனங்களின் வியாக்கியானம் சந்ததியிலிருந்து சந்ததிக்கு கடந்து வந்ததைக் குறிப்பிடுகிறது. மனமாற்றப்படுவதற்கு முன், பவுல் ஒரு பரிசேயமுறைப்படி வளர்க்கப்பட்டார், அவர் (தன்னுடைய) "பிதாக்களுடைய பாரம்பரியத்தில்" மிகவும் வைராக்கியமாயிருந்தார் (கலாத்தியர் 1:14).

பாபிலோனிய சிறையிருப்புக்குப்பின், யூதமத போதகர்கள் ஜனங்களின் அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு அற்பவிஷயங்களுக்குக் கூட முக்கியத்துவம் கொடுத்து அதற்கென விதிமுறைகளை ஏற்படுத்தி ஜனங்களைக் கட்டுப்படுத்த முற்பட்டனர். இந்த விதிமுறைகளின் நோக்கம் பிரமாணத்துக்கு மேலும் விளக்கமளிப்பது. அவைகள் யூதர்களின் வீழ்ச்சிக்கு காரணமாயிருந்த பழைய பாவங்களை மீண்டும் மீண்டும் செய்யாதபடி நோக்கங்கொண்டிருந்தன. அவர்களுடைய இந்த விதிமுறைகள் "நியாயப்பிரமாணத்தைச் சுற்றி ஒரு வேலிபோல்" இருக்கவே நோக்கங்கொண்டிருந்தன.[4] வாய்மொழியாகவே நூற்றாண்டுகளாக அடுத்தடுத்து கையாளிக்கப்பட்டு வந்தது, அவைகள் மிஷ்னாவில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ரபீக்கள் இந்த வாய்மொழி பிரமாணம்

சீனாய் மலையில் மோசேயினிடத்தில் கொடுக்கப்பட்டதாக குறிப்பிடுகின்றனர், அதிலிருந்து இஸ்ரவேலின் மூப்பர்கள் வழியாய் தொடர்ந்து ஒவ்வொரு சந்ததிக்கும் கொடுக்கப்பட்டு வருவதாகக் கூறுகின்றனர்.[5]

இருந்தபோதிலும், அனைத்து யூதர்களும் இந்த பாரம்பரியங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. வேதபாரகரிலும் பரிசேயரிலும் பெரும்பாலானோர் இந்த பாரம்பரியங்களை எழுதப்பட்டபிரமாணத்தைப் போலவே கட்டுப்படுத்தக் கூடியவைகள் என்பதுபோல் அக்கறை காட்டுகின்றனர். இருப்பினும், சதுசேயர்கள் அவைகளை புறந்தள்ளினார்கள், “தேசத்து மக்களில் சிலரும்,” பொதுவான ஜனங்களும், அவைகளோடு ஒத்துப்போக இயலவில்லை.[6] ஜோசிபஸ் பின் வருமாறு எழுதினார்,

> *பரிசேயர்கள் அநேக பெரிய காரியங்களை அனுசரிக்கும்படி ஜனங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்கள், அவைகள் தங்களுடைய முற்பிதாக்கள் வழியாய் வந்தவை, மோசேயின் பிரமாணத்தில் எழுதப் படாதவை; இந்தக் காரணத்தினால் சதுசேயர்அவைகளை புறக்கணித்து அந்த அநுசரிப்புக்களெல்லாம்* எழுதப்பட்ட நியாயப்பிரமாணத்தில் *இடம் பெற்றிருக்குமேயானால் அவைகளை கைக்கொள்ள வேண்டிய கடமைக்கு உட்பட்டிருப்போம்,* முற்பிதாக்களின் பாரம்பரியமாகத் *தோன்றியவையாதலால் கைக் கொள்ளவேண்டிய கட்டாயத்தில் இல்லை என்றனர். இது குறித்து அவர்களுக்குள்ளாகவே வாக்குவாதங்களும் எழுந்து பெரிய பிரச்சனையாகவும் உருவெடுத்துள்ளது. சதுசேயர்கள் தங்கள் கருத்துக்களை ஐசுவரியவான்களிடம் மட்டுமே ஏற்றுக் கொள்ளச் செய்ய முடிந்தது ... , ஆனால் பரிசேயர்கள் திரளான மக்களைத் தங்கள் பக்கம் ஈர்த்துள்ளனர்.*[7]

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, இந்த மனுஷருடைய கற்பனைகள் தேவனுடைய - வசனத்துக்கு மேலான முதன்மைத்துவ இடத்தைப் பிடித்தது. பின்னதாகக் கிடைத்த ஆதாரங்கள் அறிவிக்கிறபடி இந்த வாய்மொழிப் பிரமாணங்கள் எழுதப்பட்ட பிரமாணங்களுக்கு மேலான மதிப்பைப் பெற்று விட்டன.[8]

கர்த்தருடைய சீஷர்களுக்கு எதிரான அவர்களுடைய குற்றச்சாட்டுகளில், வேதபாரகரும் பரிசேயரும் அவை தங்களுடைய வாய்மொழிப் பிரமாணம் தான் மீறப்பட்டது, எழுதப்பட்ட பிரமாணமல்ல என்கிற உண்மையை அவர்கள் மறைக்க முயற்சிக்கவில்லை. அவர்கள் சீஷர்களைக் குற்றப்படுத்தி அவர்கள் சாப்பிடுவதற்கு முன் தங்கள் **கைகளை கழுவவில்லை** என்றார்கள். தனிப்பட்ட சுகாதாரத்தின் நிமித்தம் குற்றப்படுத்தவில்லை, மாறாக, அது சடங்காச்சார சுத்திகரிப்புக்காகத் தோன்றிய ஒரு பாரம்பரியம். நம்முடைய கர்த்தரைக் குற்றப்படுத்துவோரின் விவாதம் பின்வருமாறு இருந்தது: ஒரு மனிதன் பகல் நேரத்தில் அசுத்தமானதைத் தொட வேண்டியிருக்கும். அவன் சாப்பாட்டு வேளையில் சாப்பிடும்படி **அப்பத்தைக்** கையில் எடுக்கும் போது, அது அசுத்தமாகிவிடும், பிறகு, அப்பத்தை அவன் புசிக்கும்போது, அவனுடைய முழு சரீரமும் அசுத்தமாகிவிடும். அப்படியொரு சடங்காச்சாரத் தீட்டை தவிர்க்கவே, சாப்பிடுவதற்கு முன் அவன் கைகளைக் கழுவ வேண்டும் (காண்க மாற்கு 7:3, 4).[9]

ஒரு முழு கட்டுரையாக Mishnah, இடம் பெற்றுள்ளபடி, *Yadaim* (“கைகள்”) என்பது, கைகளை கழுவுவது குறித்துமட்டும் பேசுகிறது, அதில் தலைப்பின் வினையத் தன்மையை விளக்கப்படுத்துகிறது. அதில் கைகளை அசுத்தமாக்கும் காரியங்களைக் குறித்தும், கழுவுவதற்கு என்ன பொருளை பயன்படுத்தலாம் என்றும், கழுவத் தேவையான தண்ணீரின் வகை மற்றும் அளவையும், கழுவுகிற சரியான முறையையும் பற்றியெல்லாம் விவாதிக்கப்படுகிறது. உதாரணமாக, கைகள் விரல்களை மேல் நோக்கியிருக்கும்படி செய்து, மேலிருந்து தண்ணீரை மணிக்கட்டுவரை வழிந்தோடத்தக்கதாக ஊற்ற வேண்டும். இதற்குப் பிறகு, விரல்களை கீழ்நோக்கியிருக்கத் தக்கதாக வைத்துக் கொண்டு ஊற்றப்பட வேண்டும்.[10]

வேதபாரகரும் பரிசேயரும் இஸ்ரவேலின் ஆசாரியர்களுக்கு குறிப்பாக சொல்லப்பட்ட விதிமுறைகளை தங்களுக்கென எடுத்துக் கொண்டு அவைகளை சாதாரண ஜனங்களின் மேல் பயன்படுத்தினார்கள். யாத்திராகமம் 30:17-21 ன்படி, ஆசாரியர்கள் தங்கள் கைகளையும் கால்களையும் நியமன சடங்காச்சாரத்தின்படியான பலிகளைச் செலுத்துவதற்கு முன் வெண்கல தொட்டியில் வைக்கப்பட்ட தண்ணீரில் கழுவ வேண்டும். இந்த சடங்காச்சாரப்படி கைகளை கழுவுவதன் மூலம், பொது ஜனங்கள் “தங்களுடைய அன்றாட உணவை தேவாலயத்து பலிபீடத்தில் செலுத்தப்பட்ட பலியாக” நினைத்து புசிப்பார்கள் என்று பரிசேயர் நம்பினர்.[11] “இந்த விதமான அனுசரிப்பும், வேறு சில இதே போன்ற ஆசரிப்புகளும், தேவனுக்கு முன்பாக தங்களுடைய பரிசுத்தத்தை உறுதிப்படுத்தும்.”

**வசனம் 3.** யூத பாரம்பரியத்தின்படி வாய்மொழிப் பிரமாணம் மோசேயினிடத்தில் சீனாய் மலையில் கொடுக்கப்பட்டதாகச் சொன்னாலும், இயேசு அந்தக் காரியத்தை அதிகாரமிக்கதாக காணவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆகிலும், அதை ஒரு விவாதத்திற்கான விஷயமாக அந்தச் சடங்காச்சார கைகழுவுவதை தர்க்கிக்க வில்லை. நல்ல ஒரு ரபீயின் (போதகர் என்ற) முறையில் மற்றொரு கேள்வி கேட்டு அதற்கு பதில் கொடுக்கிறார்: **நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்?** வலியுறுத்தும் இயல்பாக கிரேக்க வசனப்பகுதி மொழிபெயர்ப்பில் கொண்டு வரப்பட்டுள்ளது “நீங்கள் உங்கள்”; இயேசு திருப்பி பரிசேயர்களைச் சுட்டிக் காட்டுகிறார். சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை மட்டுமே மீறி நடந்தார்கள், பரிசேயரோ தேவனுடைய கற்பனையையே மீறி நடந்தார்கள்! எல்லாவற்றுக்கும் மேலாக, அவர்கள் தேவனுடைய எழுதப்பட்ட வெளிப்பாட்டைக் காட்டிலும் தங்களுடைய வாய்மொழிபாரம்பரியத்தை அதிக முக்கியத்துவமுள்ளதாகக் கருதி நடந்து கொண்டார்கள்.

**வசனம் 4.** தம்முடைய கருத்தை இன்னும் அதிகமாய் விவரிக்கும் பொருட்டு இயேசு வேதபாரகர் பரிசேயருடைய நிலையை ஒரு உதாரணத்தின் மூலம் முன்வைக்கிறார். **அவர்கள் தேவன் சொன்ன ஐந்தாம் கற்பனையாகிய உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதை மீறுவதாகக் குறிப்பிட்டார்** (யாத்திராகமம் 20:12; காண்க மத்தேயு 19:19; எபேசியர் 6:2). இந்தக் கட்டளையோடு, இயேசு மற்றொன்றையும் சேர்த்து சொன்னார், பெற்றோரை நிந்திக்கிறவனுக்கு வரும் தண்டனையையும் உட்படுத்துகிறார்:

***தன் தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்பட வேண்டும்*** *(யாத்திராகமம் 21:17; லேவியராகமம் 20:9).*

*நியாயப்பிரமாணம் "கனப்படுத்துதல்" என்பதுடன் சம்பந்தப்பட்ட அனைத்து விளக்கங்களையும் கொடுக்கவில்லை, ஆயினும், அது பண உதவியையும் உட்படுத்தி பேசுகிறது என்பது தெளிவு (காண்க 1 தீமோத்தேயு 5:4). கிறிஸ்துவின் காலத்தில் யூதர்களுக்குள்ளே சமூக நலப்பணித்திட்டம் எதுவும் இருக்கவில்லை. பெற்றோர் தங்களுக்கு வேண்டியவைகளை தாங்களே சம்பாதிக்க முடியாத நிலையில் இருக்கும்போது, பிள்ளைகள் அவர்களுக்கு கொடுத்து உதவ வேண்டும் என்பது ஒரு புரிந்து கொள்ளுதல் அடிப்படையில் இருந்தது. ஒரு ரபீக்களின் பாரம்பரியத்தில் மகன் தான் தனது தகப்பனுக்கு புசிப்புக்கும் குடிப்புக்கும் தேவையானவற்றைக் கொடுத்து உதவ வேண்டும், அவருக்கு வேண்டிய உடைகளையும், போர்த்துக் கொள்ள வேண்டியவைகளையும், வெளியிலே கூட்டி போவதும், உள்ளே கூட்டி வருவதும், முகம், கை, கால் பாதங்களை கழுவிவிடவும் செய்ய வேண்டும்.[12] மற்றொரு பாரம்பரியம் சொல்லுகிறது, ஒரு மகன் பிச்சையெடுத்தாகிலும் தனது தகப்பனுக்கு உதவி செய்ய வேண்டும்.[13] வசனங்கள் 5, 6, "உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக" என்ற கட்டளையை தெளிவாக கர்த்தர் விளக்குகிறார். அது அன்பையும் மதிப்பையும் மட்டும் உள்ளடக்கினதாக இராமல், தேவைப்பட்டால் பணம் சம்பந்தப்பட்ட ரீதியிலும் உதவுவதையும் உள்ளடக்கியது.*

***வசனங்கள் 5, 6. நீங்களோ சொல்லுகிறீர்கள்*** *எனும் சொற்றொடர் வசனம் 4ல் குறிப்பிடப்பட்ட "தேவன் கற்பித்திருக்கிறபடி" எனும் சொற்றொடருக்கு முரணானது. இந்த மூன்று வார்த்தைகளைக் கொண்டு, இயேசு பரிசேயர்களை தேவனுக்கு நேர் எதிராக வைக்கிறார். "உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக," என்று தேவன் கட்டளையிட்டிருக்க, பொருத்தனைகளைக் குறித்த மட்டில், அவர்களுடைய தீர்ப்பின்படி, பரிசேயர்களின் விதி,* ***அவன் தன் தகப்பனையாகிலும் தாயையாகிலும் கனம் பண்ண வேண்டியதில்லை.*** *(வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது.)*

*தங்களுடைய பெற்றோர்களுக்கு அவர்கள் உதவ வேண்டிய பொறுப்பைத் தவிர்க்க, ஒரு கீழ்ப்படிதலில்லாத யூதன் செய்யும் பொறுத்தனை,* ***உனக்கு நான் செய்யத் தக்க உதவி எது உண்டோ, அதை காணிக்கையாகக் கொடுக்கிறேன்*** *என்று சொன்னான். கிரேக்க வசனப் பகுதியில் பெயர் சொல்லாகிய "வெகுமதி" (dōron), எனும் பதம் பெரும்பாலும் பலிசெலுத்துதலாகிய வெகுமதி களையும், தேவாலயத்தில் செலுத்தும் காணிக்கைகளையும் குறிக்கும் பதமாகும் (5:23, 24; 8:4; 23:18, 19; லூக்கா 21:1, 4). மாற்கு புத்தகத்தில், dōron, என்பதோடு "கொர்பான்" எனும் வார்த்தையையும் சேர்த்து பயன்படுத்தப்பட்டுள்ளது (மாற்கு 7:11). இந்த நுட்பமிக்க வார்த்தை, எபிரேய மொழியிலிருந்து பொழிப்புரையாக கிரேக்கமொழியிலும் (பிறகு ஆங்கில மொழியிலும்), மொழியாக்கம் செய்யப்பட்டது, தேவனுக்கென்று வெகுமதியாக பொருத்தனை செய்யப்பட்ட ஏதோ சிலவற்றைக் குறிக்கிறது. சம்பந்தப்பட்ட பெயர்ச்சொல் korbanas என்பது "தேவாலயத்து கருவூலத்தைக்" - குறிக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டது (27:6).*

*யூதர்கள் அடிக்கடி "கொர்பான்" எனும் சொத்தை*

அடையாளப்படுத்துவார்கள். எப்படியிருப்பினும், கொடுக்கப்பட்ட பொருட்கள் எப்பொழுதும் தேவாலயத்து கருவூலத்திற்கு கொடுக்கப்படவில்லை - குறைந்த பட்சம் அதன் உரிமையாளர் உயிரோடிருக்கும் வரை. அப்படி பொருத்தனை செய்யப்பட்ட பொருட்கள் சாதாரண பயன்பாடுகளுக்கு தடை செய்யப்பட்டன, ஒருவனுடைய பெற்றோர்களுக்குக் கூட அவை உதவி செய்யப்படக் கூடாது. தற்போது நாம் படித்துக் கொண்டுள்ள விஷயத்தில், ஒருவர் (ஒருவேளை கோபத்தில் கூட) தனது வயதான பெற்றோருக்கு செய்யப்பட வேண்டிய உதவியை தேவனுக்கென்று நேர்ந்து கொள்ளக் கூடும். மிஷ்னா என்பது அவனிடத்திலிருந்து அவனது தகப்பன் ஒரு உதவியையும் பெற முடியாதபடி பொருத்தனை செய்த ஒரு மனிதனை உதாரணமாகக் கொடுத்துள்ளது.[14]

பொருத்தனைகள் கட்டுப்படுத்தக் கூடியவைகளாக இருந்தபடியால் (எண்ணாகமம் 30:2; உபாகமம் 23:21-23), பரிசேயர்கள் பொருத்தனைகளை மீறுவோரை குற்றப்படுத்தி (அதாவது, மனித பாரம்பரிய பொருத்தனைகளை) தங்களின் தேவையுடைய பெற்றோருக்கு உதவுவதை (தேவனுடைய பிரமாணத்தை) செயல்படுத்துவது மிக வினயமான பாவமாக்கப்பட்டது.[15] காலத்தினூடே, இந்த காரியத்தைக் குறித்த சிந்தனை மாற்றம் பெற்றது. Mishnah[16] *korban* பொருத்தனை ஒருவன் தன் பெற்றோருக்குச் செய்யும் கடமைக்கு விரோதமானதாயிருப்பின், பொருத்தனை பயனற்றதாகி விடும் எனும் கருத்தையும் கூறியது.[17]

தங்களுடைய **பாரம்பரியத்தினாலே,** பரிசேயர்கள் தேவனுடைய வார்த்தையை **அவமாக்கிப் போட்டார்கள் என்று இயேசு சொன்னார்.** "அவமாக்குதல்" (*akuroō*) என்பது ஒரு சட்ட ரீதியான பதம், அதாவது "பயனற்றதாக்குதல்" என்று பொருள்படும். AB மொழிபெயர்ப்பில் இயேசுவின் வார்த்தைகளை பொழிப்புரையாக இப்படியாகச் சொல்லுகிறது: "நீங்கள் தேவனுடைய வசனங்களை தனியே எடுத்து - அதன் வல்லமையையும் அதிகாரத்தையும் (வேதத்தைக்) குறைத்து எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாமல் செய்தீர்கள்."

**வசனம் 7.** இயேசு இந்த யூத தலைவர்களை **மாயக்காரர்கள்** என்று அழைத்தார் (6:2, 5 க்கான விளக்கவுரையை காண்க). அவர்கள் தேவனுடைய பிரமாணத்தைக் தாங்குவதுபோல் பாவ்லா செய்தார்கள், ஆனால் உண்மையில் அவர்கள் அவைகளுக்கு எதிராகவே இருந்தார்கள். அவர்கள் பொருத்தனைகளின் இயல்பான கட்டுப்பாடுகளை ஆதரித்தார்கள், அவைகளின் தோற்றம் உண்மையிலேயே தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருவதாயிருந்தன. ஆயினும், ஒருவனுடைய பெற்றோர்களுக்கு உதவி செய்கிற விஷயத்தில் மறுதலித்து சுயநலத்தில் ஆர்வமிக்கவர்களாயிருந்தனர். அப்படிப்பட்ட பொருத்தனைகளை கைக் கொண்டிருப்பதன் மூலம் பரிசேயர்கள் தேவனையும் அவருடைய பிரமாணத்தையும் கனவீனப்படுத்தினார்கள்.

இயேசு தமது மறுமொழியை ஒரு வசனத்தை மேற்கோளாக ஏசாயா 29:13ஐ சுட்டிக் காட்டி முடிக்கிறார். அவர் கடிந்து கொண்ட மேற்கோள் வசனத்துக்கு முன்னுரையாக கொடுத்த வாக்கியம் கொடுக்குகளை போன்றது: **ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய் சொல்லியிருக்கிறார்** என்றார். தீர்க்தரிசி பேசிய பொழுது தமது நாட்களில் இருந்த இஸ்ரவேவர்களை நேரடியாகப் பேசினார்

என்றாலும், ஏவப்பட்ட அவருடைய வார்த்தைகள் முதல் நூற்றாண்டில் இருந்த யூதர்களுக்கும் பொருந்தக் கூடியவைகளாயிருந்தன (காண்க நடபடிகள் 28:25-27), என்று இயேசு குறிப்பிடுகிறார். William Hendriksen வியாக்கியானமளித்து, "வரலாறு, வேறொரு வார்த்தையில் சொன்னால், தன்னில் தானே மறுபடியும் தொடர்கிறது"[10] என்றார்.

**வசனம் 8. இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள், அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது.** இயேசு இந்த பழைய ஏற்பாட்டு வசனத்தை பயன்படுத்தி "கனம் பண்ணுதல்" எனும் வார்த்தையில் தமது நிகழ்வை பகிர்ந்து கொள்கிறார். அவருடைய சீஷர்கள் பாரம்பரியத்தைக் கைக்கொள்ளவில்லை என்பதுதான் அவர்களின் குற்றச்சாட்டு. இயேசு அவர்கள் தங்கள் பெற்றோர்களை கனம் பண்ண வேண்டிய கட்டளைக்கு கொண்டு செல்கிறார். பெற்றோர் தங்கள் பிள்ளைகளால் கனம்பண்ணப்பட வேண்டும் என்பது தேவனுடைய கட்டளை. பரிசேயர்களும் வேதபாரகர்களும் பாரம்பரியத்தைக் கனம் பண்ணினார்கள் ஆனால் தங்கள் பெற்றோர்களை கனம்பண்ணுவது போல காட்டிக் கொண்டனர் (காண்க 15:4).[19] உண்மையான பக்தி தேவனிடத்தில் மற்ற எல்லாவற்றிற்கும் மேலான அன்பு கொண்டுள்ள நேர்மையான இருதயத்திலிருந்து உருவாகிறது (உபாகமம் 6:5; மத்தேயு 22:37, 38).

**வசனம் 9. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்.** "வீணான" (*matēn*) என்பது "பயனளிக்காத" அல்லது "எந்த முடிவையும் ஏற்படுத்தாத" என்று பொருள். விக்கிரகங்களை வணங்குவது குறித்தும் இது போன்ற வார்த்தை நடைதான் பயன்படுத்தப்பட்டுள்ளது (வீணான; நடபடிகள் 14:15). கூடுதலாக, தனது நாவை அடக்காத கிறிஸ்தவனின் பக்தி "பயனற்றது" என்று விவரிக்கப்படுகிறது (யாக்கோபு 1:26).

இந்த வார்த்தை நடையால் இன்று எப்படிப்பட்ட தொழுகையையும் தேவன் ஏற்றுக்கொள்கிறார் என்ற கருத்தை எதிர்க்கக் கூடியதாய் இந்த வசனம் பேசுகிறது. ஆரம்பத்திலிருந்து, உண்மையான இருதயத்தோடு அவர் கொடுக்கும் கட்டளைப்படி ஜனங்கள் தம்மை ஆராதிக்க வேண்டும் என்று அவர் கோரியிருக்கிறார் (ஆதியாகமம் 4:1-8).

இந்த விஷயத்தில், இயேசு வேதபாரகரையும் பரிசேயரையும் கண்டித்து அவர்கள் மனிதப் பாரம்பரியங்களை தேவனுடைய கட்டளைகளுக்குப் பதிலாக வைப்பதை கண்டனம் பண்ணுகிறார். பொது ஜனங்களை கைக்கொள்ளும்படி அவர்கள் போதித்தவைகள் மூலம் அவர்களுடைய பக்தியின் பயனற்ற தன்மையை தெளிவாக்குகிறார். கிரேக்க மொழியில், "மனிதனுடைய கற்பனைகளை" எனும் சொற்றொடர் (*didaskontes didaskalias*) அலப்புதலையும் போதித்தவைகளையே போதித்தல் என்ற நேரடிப் பொருளையும் உள்ளடக்கின வார்த்தை. பாரம்பரியங்களே பிரமாணமாக ஏதுவாக சந்தர்ப்பமிருந்தாலும், தேவனுடைய பிரமாணத்துடன் தலையிடுவதாகவும் இருந்த போதிலும், எல்லா பாரம்பரியங்களும் தவறானவைகளல்ல.

இந்தப் பகுதியில், இயேசு எல்லா பாரம்பரியங்களையும் கண்டனம் பண்ணவில்லை. ஜெப ஆலயதொழுகைகளில் பங்கு கொள்வது, ஒரு உணவுக்கு முன் நன்றி செலுத்துவது, பஸ்கா பண்டிகையின் போது தேவனை புகழும்

*சங்கீதங்களைப் (113-118) பாடுவது போன்றவைகளை கைக் கொண்டிருந்தார். ஆயினும், அவர், பாரம்பரியத்தையே கட்டுப்படுத்தும் பிரமாணமாகவும் அவைகளை தேவனுடைய பிரமாணத்துக்கு சமமாக்குவதையுமே எதிர்த்து தர்க்கித்தார்.*[20]

## *உண்மையான தீட்டு (15:10-20)*

***[10]பின்பு அவர் ஜனங்களை வரவழைத்து, அவர்களை நோக்கி: நீங்கள் கேட்டு உணருங்கள்.***

***[11]வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்.***

***[12]அப்பொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: பரிசேயர் இந்த வசனத்தைக் கேட்டு இடறலடைந்தார்கள் என்று அறிவீரா என்றார்கள்.***

***[13]அவர் பிரதியுத்தரமாக: என் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேறோடே பிடுங்கப்படும்.***

***[14]அவர்களை விட்டுவிடுங்கள், அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள்; குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே என்றார்.***

***[15]அப்பொழுது, பேதுரு அவரை நோக்கி; இந்த உவமையை எங்களுக்கு வெளிப்படுத்தவேண்டும் என்றான்.***

***[16]அதற்கு இயேசு: நீங்களும் இன்னும் உணர்வில் லாதவர்களாயிருக்கிறீர்களா?***

***[17]வாய்க்குள்ளே போகிறதெல்லாம் வயிற்றில் சென்று ஆசன வழியாய்க் கழிந்துபோம் என்பதை நீங்கள் அறியவில்லையா?***

***[18]வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டு வரும்; அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்.***

***[19]எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும் களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும்.***

***[20]இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்; கைகழுவாமல் சாப்பிடுகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது என்றார்.***

*மத்தேயு (15:1-20) வின் இந்தப் பகுதி தொடர்ந்து நடைபெறும்போது இயேசுவுடனிருந்த கூட்டம் தொடர்ந்து மாறுகிறது. முதலாவதாக, யூதத்தலைவர்களிடம் அவர் விவாதித்து மனிதனுடைய கற்பனைகளான பாரம்பரியத்தைக் கடிந்து கொள்கிறார் (15:1-9). பின்பு அவர் கூட்டத்தாரிடம் உண்மையான ஆவிக்குரிய தீட்டு எது என்பது குறித்து பேசினார் (15:10, 11). முடிவில், தமது வார்த்தைகளுக்கு மேலும் விளக்கமளித்து தமது சீஷர்களிடத்தில் பேசினார் (15:12-20).*

***வசனம் 10. இயேசுவை*** *சுற்றியிருந்த ஜனங்களைப் பார்த்து அவர் பேசினார் என்பது அநேகமாக 14:34-36ல் பேசப்படுகிற* ***கூட்டமாயிருக்கலாம்,*** *அவர்கள் அவருடைய அற்புதங்களைக் கண்டவர்களாகவோ அல்லது தங்களால் நேசிக்கப்பட்டவர்களை அவரிடத்தில் விட்டு சுகம்பெறச் செய்தவர்களாகவோ*

இருந்திருக்கலாம். அவர்கள் நின்று யூதத் தலைவர்களுக்கும் இயேசுவுக்குமிடையே நடந்த தர்க்கங்களை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. அவர் அவர்களை தம் அருகில் **வரவழைத்தார்** என்பதன் நோக்கம் இந்த தலைவர்களிடம் தாம் சொன்னவைகளை விரிவுபடுத்திக் காட்டவே. இயேசு அவர்களுக்கிருந்த ஒரு விரிவான குடைபோன்ற பாரம்பரியங்களைப் பற்றிய கேள்விகளை மாத்திரமே கையாண்டார் (15:2அ). இந்த வசனப் பகுதியில், குறிப்பாக சடங்காச்சாரமாக கைகழுவுவதை கையாண்டு பேசினார் (15:2ஆ).

**கேட்டு உணருங்கள்** என்ற வாக்கியம் "நான் சொல்லுவதைக் கவனமாகக் கேளுங்கள்" என்று சொல்வதற்காக இயேசு பயன்படுத்தும் விதம் அது (காண்க 11:15; 13:9, 43). காலத்தால் அதிகமாக கனப்படுத்தப்பட்ட சடங்காச்சாரமான சாப்பிடுவதற்கு முன் கை கழுவுகின்ற பாரம்பரியத்திற்கு எதிரிடையாக அவருடைய வார்த்தைகள் இருந்ததால் அவருடைய உபதேசத்தையோ அவரது வார்த்தைகளையோ புரிந்துகொள்ளவும் ஏற்றுக் கொள்ளவும் அநேகருக்கு மிகவும் கடினமாயிருந்திருக்கும்.

**வசனம் 11. வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது. வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்** என்று இயேசு சொன்னார். இந்த "உவமையின்" மூலம் (15:15), ஒரு நபர் எப்படி தேவனுடைய பார்வையில் தீட்டுள்ளவனாகிறான் என்பதை கர்த்தர் விளக்கப்படுத்துகிறார். சதுசேயர் பரிசேயருடைய பாரம்பரியம் வலியுறுத்தும் *சடங்காச்சாரமான* அசுத்தம் என்பதை அவர் மறுத்தார். ஒரு மனிதன் தன் வாய்க்குள் போட்டுக் கொள்வது எதுவும் அவனை *ஆவிக்குரிய* தீட்டுள்ளவனாக ஆக்காது என்பது அவருடைய போதனையாயிருந்தது. பரிசுத்தம் என்பது புறம்பேயிருந்து வருவதல்ல, அது உள்ளிருந்து புறப்பட்டு வெளியில் வரும் போது அசுத்தப்படுத்துகிறது (23:25-28). இருதயத்திலிருந்து புறப்பட்டு வருகிற பொல்லாத சிந்தனைகள் தான், ஒருவருடைய பேச்சில் காணப்படுகிறது (12:34, 35; 15:19, 20; எபேசியர் 4:29; யாக்கோபு 3:6).

**வசனம் 12. சீஷர்கள்** இயேசுவிடத்தில் வந்து, **பரிசேயர் அவருடைய போதகத்தைக் கேட்டு இடறலடைந்ததாகக் குறிப்பிட்டார்கள்.** இடறலடைதலுக்கு கிரேக்க மொழியில் (*skandalizō*) அடிக்கடிப்பயன்படுத்தும் பதம் "பாவஞ்செய்ய வை" என பொருள்படும். எப்படியிருப்பினும், இங்கே குறிப்பிடப்படும் வார்த்தை செய்யப்படுவினையில் "கலக்கமடையப்பட்டார்கள்," "அதிர்ச்சிக்குள்ளாக்கப்பட்டார்கள்" அல்லது "கோபமூட்டப்பட்டார்கள்" எனும் பொருளில் பேசுகிறது. இதற்கு முந்தைய வசனங்களில் இயேசு சொன்னவைகள் பரிசேயர்களுக்கு இடறுதலாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை, "இந்த வசனத்தைக் கேட்டு," என்பது இந்த வசனப்பகுதியின் 11ம் வசனத்தில் சொல்லப்பட்ட காரியம். மிகக் கவனமாக அவர்கள் தங்களுடைய சடங்காச்சார கைகழுவுதலாகிய ஆசரிப்பை செய்த காரியம், ஆவிக்குரிய மதிப்பு எதையாவது கொடுக்குமா என்றால், கொஞ்சம் இருந்திருக்கலாம் எனக் காட்டுகிறது. இந்த அனுசரிப்பு - அவர்களுக்கு மிகப் பெரிய பெருமையை கொடுத்தது - ஆகிலும் வீணாக நேரத்தையும் பெலனையும் செலவிட வைத்தது. அவர்களுடைய இந்தசெயல்பாடு வெளிப்புறமான சடங்காச்சாரத்தை ஏற்படுத்தியது, உள்ளான

*தூய்மையை உண்டாக்கவில்லை. அவர்களுடைய பாரம்பரியத்தை குறைத்து மதிப்பிட்டு, இயேசு பரிசேயர்களின் அதிகாரத்தை அடியோடு வீழ்த்துகிறார்.*

*இந்தத் தலைவர்களின் எதிர் கிரியைகளைக் கண்டு கவலைப்பட்ட செயல் சீஷர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்குறைவை காட்டினது. அரசியல் நேர்தன்மை யைப்பற்றி இயேசு அக்கறை கொண்டிருக்கவில்லை; அவருடைய அக்கறையெல் லாம் சத்தியத்தைக் குறித்து மட்டுமே. தமது வசனங்கள் பரிசேயர்களை இடறலடையச் செய்யும் என்று அவருக்குத் தெரியும். சத்தியம் சில வேளைகளில் பாதிப்படையச் செய்யும், உண்மையில் பெரும்பாலும் ஜனங்களை அது இடறலடையச் செய்யும். சத்தியத்தை எப்போதும் அன்போடு போதிக்க வேண்டும் (எபேசியர் 4:15), ஆகிலும் இரட்சிக்கப்படத்தக்க சத்தியத்தை சொல்லித்தான் ஆகவேண்டும், இல்லையேல் மிகப்பெரிய சேதத்தை சந்தித்தாக வேண்டும் (1 தீமோத்தேயு 2:4).*

***வசனம் 13.*** *சீஷர்களின் வாக்கியத்துக்கு மறுமொழியாக இயேசு,* **என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேறோடே பிடுங்கப்படும் *என்றார்.*** *இதன் மையப்பொருள் என்னவெனில் பிதாவினிடத்திலிருந்து வராத எதுவும் நிலைத்திருக்காது. "என் பரமபிதா" எனும் சொற்றொடர் இயேசுவுக்கும் தேவனுக்குமிடையிலான நெருங்கிய உறவுமுறையை சுட்டிக் காட்டுகிறது (காண்க 18:35). இப்படிப்பட்ட உறவு முறையினால், இயேசு யூதத்தலைவர்களிடம் அதிகாரத்தோடு பேச முடிந்தது (காண்க 7:28, 29).*

*"நாற்றெல்லாம்" என்பது ஒருவேளை பரிசேயர்கள் போதித்த தவறான உபதேசங்களைக் சுட்டிக் காட்டுவதாயிருக்கலாம். இந்த மனுஷருடைய பாரம்பரியங்கள் தேவன் நடாத நாற்றுக்களாயிருந்தன. அவருடைய சத்தியம் என்றென்றும் நிலைத்திருக்கக் கூடியதாயிருக்கிறபடியால், தேவனுடைய சத்தியத்தினாலே அது வேரோடே பிடுங்கப்படும். அந்த நித்திய சத்தியம் இயேசுவின் ஊழியத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது.*

*மற்றொரு பொருளில் "நாற்றெல்லாம்" என்பது பரிசேயர்களையே குறிக்கலாம், அவர்கள் தங்களுடைய பாரம்பரியங்களை தேவனுடைய வசனத்திற்குப் பதிலாக மாற்றினார்கள். பழைய ஏற்பாட்டில், தேவனுடைய ஜனங்கள் அவருடைய "செடிகளாக" அல்லது அவரால் "நாட்டப்பட்டவர்களாக" குறிப்பிடப்படுகின்றனர் (ஏசாயா 5:2, 7; 60:21; 61:3; எசேக்கியேல் 17:22, 23). நாட்டுவதும் வேறொடே பிடுங்கப்படுவதும் ஆகிய உருவகம் எரேமியாவில் விசேஷமாக சொல்லப்படுகிறது (எரேமியா 1:10; 2:21; 11:17; 12:2; 18:7, 9; 24:6; 31:28; 32:41; 42:10; 45:4). "நாற்றெல்லாம்" என்பது பரிசேயர்களைக் குறிக்குமானால், பிறகு "வேறொடே பிடுங்கப்படும்" என்பது அவர்களுக்குக் கிடைக்கும் நியாயத்தீர்ப்பைச் சுட்டிக் காட்டுகிறது (காண்க 3:7-12; 13:24-30, 36-43). இந்த இரண்டு கோணங்களுமே அதன் பொருளில் உட்படுத்தப்படுகிறது.*

***வசனம் 14.*** *தமது சீஷர்களுக்கு கர்த்தர் கொடுத்த எச்சரிக்கை, அவர்களை விட்டுவிடுங்கள். சீஷர்கள் அந்த பரிசேயர்களுடைய நிலைமையைக் குறித்து பாதுகாப்பு செய்யவோ அவர்களுடைய விருப்பத்தில் அக்கறை காட்டவோ வேண்டுவதில்லை (15:12). இந்த மதச்சார நபர்களிடமிருந்து அவர்கள் விலகியிருக்க வேண்டியவர்கள், ஏனெனில் அவர்கள் இவர்களுக்குக் கொடுக்கப்போகிற காரியம் எதுவுமில்லை, பின்னதாக இயேசு தமது*

சீஷர்களை எச்சரித்து, **"பரிசேயர்களாகிய புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்"** என்று சொன்னார், அதாவது, அவர்களுடைய உபதேசத்தைக் குறித்து (16:11, 12). இயேசு இந்த எச்சரிக்கைகளை கொடுப்பதன் அவசியத்திலிருந்து, யூதஜனங்கள் மேல் பரிசேயர்களுக்கு இருந்த செல்வாக்கு குறிப்பிடப்படுகிறது (காண்க யோவான் 7:13; 9:22; 12:42; 19:38, 39).

பரிசேயர்கள் தங்களை **"குருடருக்கு வழிகாட்டிகளாகவும்,"** ஆவிக்குரிய அந்தகாரத்தில் இருப்பவர்களுக்கு வெளிச்சமாகவும் எண்ணிக் கொண்டிருந்தார்கள் (ரோமர் 2:19). அப்படிப்பட்ட உரிமையை அவர்கள் கொண்டாடிக் குருடராக இருந்து கொண்டு குருடருக்கு வழி காட்டுவதாக இயேசு சொன்னார் (23:16, 24; காண்க யோவான் 9:39, 40). கண் கோளாறுகள் முதல் நூற்றாண்டில் பலஸ்தீனா பகுதியில் பரவலாக இருந்தது, பார்வையற்ற பிச்சைக்காரர்கள் சர்வ சாதாரணமாகக் காணப்பட்டனர்.[21] அதன் விளைவாக ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப்போக மற்றவர்களின் உதவி அவர்களுக்குத் தேவைப்பட்டது. ஆயினும், ஒரு பார்வையற்றவன் இன்னொரு பார்வையற்றவனை வழிநடத்தினால் அது மிகவும் மிகையான பரிமாணத்தில் சோகக்காட்சியாயிருக்கும், ஏனெனில் **இருவரும் குழியில் விழுவார்கள்** (காண்க லூக்கா 6:39). பரிசேயர்கள் தாங்களாக எந்த சத்தியத்தையும் அறிந்திருக்கவில்லை, ஆனாலும் அவர்கள் மற்றவர்களை அழிவின் பாதையில் நடத்திக்கொண்டிருந்தனர். ஒரு நபர் கள்ளப் போதகன் ஒருவனைப் பின் பற்றிப்போனால், அந்தப் போதகன் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவான் ஆனால் பின்பற்றிப் போனவர்களுக்கு அப்படிப்பட்ட தீர்ப்பு இல்லை என்று நினைக்கின்றனர். போதிக்கிறவனுக்கும் பின்பற்றிப் போகிறவர்களுக்கும் ஆகிய இருசாராருக்குமே சத்தியத்தை ஏற்றுக்கொள்ளபொறுப்பு இருக்கிறது என்பதை இயேசு காண்பித்தார்.

**வசனம் 15. பேதுரு அவரை நோக்கி, இந்த உவமையை எங்களுக்கு விளக்க வேண்டும்** என்றார். அநேக இடங்களில், பேதுரு சீஷர்களுக்காக பேசுபவராய் இருந்திருக்கிறார் (காண்க 14:28ன் விளக்கவுரை). நாற்றுக்கள் பிடுங்கப்படும் உருவகத்தைக் குறித்து பேதுரு சொன்னாரா (15:13) அல்லது குருடன் குருடனுக்கு வழிகாட்டுதலைப் பற்றிய உருவகத்தைக் குறித்து அப்படிச் சொன்னாரா (15:14)? இயேசுவின் மறுமொழி (15:16-20) யிலிருந்து பேதுரு இவைகளுக்கு முன்பு சொல்லப்பட்ட காரியத்தை பேசுகிறார் என்பதை குறிப்பாய் அறிகிறோம்: "வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே தீட்டுப்படுத்தும்" என்றார் (15:11). இங்கு "உவமை" என்று குறிப்பிடும் வார்த்தை (*parabolē*) விடுகதை போலப் பேசும் நடை. இயேசு தமது உவமைகளைப் பெரும்பாலும் சீஷர்களோடு தனிமையிலிருக்கும்போது விளக்கப்படுத்துவதுண்டு (13:36; மாற்கு 4:34).

**வசனம் 16.** கர்த்தர் சீஷர்களிடத்தில், **நீங்களும் இன்னும் உணர்வில்லாதவர்களாயிருக்கிறீர்களா?** என்று கேட்டார். அவர்கள் இயேசுவோடு வெகு நாட்களாக இருந்தபடியால், அவருடைய வாழ்வின் முறையையும் அவருடைய போதகங்களையும் கவனித்திருந்ததால், அவர்களுடைய புரிந்துகொள்ளுதலில் இன்னும் அதிகமான முன்னேற்றம் இருந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார். நாம் இயேசுவின்

*கேள்வியிலிருந்து சீஷர்கள் ஆவிக்குரிய பகுத்தறிவை இன்னும் அடையவில்லை என்று கண்டனம் பண்ணுகிறாரா அல்லது எளிமையான ஒரு கடிந்து கொள்ளுதலா என்பதை நாம் காண முடிகிறதா? அவருடைய ஏமாற்றம் எந்த அளவு இருந்தாலும், உவமையின் அர்த்தத்தைப் பொறுமையாக இயேசு அவர்களுக்கு விளக்கினார்.*

***வசனம் 17.*** *இயேசு உவமையின் வரியை முதல் கட்டமாக விளக்கப்படுத்துகிறார்: "வாய்க்குள்ளே போகிறதெல்லாம் மனுஷனைத் தீட்டுப்படுத்தாது" (15:11அ). இந்த நேரத்தில், அவர் அவர்களை கேட்டார்;* **வாய்க்குள்ளே போகிறதெல்லாம் வயிற்றில் சென்று ஆசன வழியாய் கழிந்துபோம் என்பதை இன்னும் நீங்கள் அறியவில்லையா?** *பரிசேயர்களின் பாரம்பரியத்தின்படி சடங்காச்சாரமான கைகழுவி சுத்தம் செய்வது மாம்ச பிரகாரமானதாக மட்டுமே செயல்படுவது. கழுவப்படாத கைகளால் சாப்பிடும் உணவுப்பொருள் "வாய்க்குள்" போய், "வயிற்றில்" ஜீரணமாகிறது, பிறகு மனிதக் கழிவாக "ஆசன வழியாய்" கழிந்து போகும். கிரேக்க வசனப்பகுதியில் அது (aphedrōn), "கழிவறைக்குள்" போகிறது என்று சொல்லப்படுகிறது* (JNT). *கை கழுவாமல் சாப்பிடும் உணவு ஒருவருடைய இருதயத்தைப் பாதிப்பதில்லை (மாற்கு 7:18) என்று கர்த்தர் வலியுறுத்திக் கொண்டிருந்தார்.*

***வசனம் 18.*** *அவரது அடுத்த குறிப்பில், இயேசு உவமையின் அடுத்த வரிக்கு கடந்து செல்லுகிறார்: "வாயிலிருந்து புறப்படுகிறதே, மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" (15:11ஆ). அவர், ஒருவருடைய பேசும் வார்த்தைகள்* **இருதயத்திலிருந்து வருகிறது** *என்று குறிப்பாய் உணர்த்துகிறார், மற்றும் இதுவே ஆவிக்குரிய தீட்டை ஏற்படுத்தக் கூடும். "இருதயம்" (kardia) ஒருவருடைய உள்ளான வாழ்வின் மையமாக இருக்கிறது; அது ஒரு நபருடைய உணர்வுகள், சிந்தனைகள், மனச்சாட்சி, மற்றும் விருப்பங்களை குறிப்பால் உணர்த்துகிறது (காண்க 5:8; 6:21ன் விளக்கவுரை). ஏற்கனவே இயேசு பரிசேயர்களை பின்வரும் வார்த்தைகளால் கடிந்து கொண்டு பேசியிருந்தார்: "விரியன் பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படி பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" என்றார் (12:34). ஒரு மனிதனுடைய இருதயம் சுத்தமானதாயிருந்தால், அவனுடைய வாயிலிருந்து புறப்பட்டு வருகிற வார்த்தைகளும் சுத்தமானவைகளாயிருக்கும். அவனுடைய இருதயம் பொல்லாததாயிருந்தால், அவனுடைய வாயிலிருந்து புறப்பட்டு வருகிற வார்த்தைகளும் பொல்லாதவைகளாகவே இருக்கும்.*

***வசனம் 19. இருதயத்திலிருந்து*** *வரும் மற்ற வகை பொல்லாங்குகளை கிறிஸ்து பட்டியலிடுகிறார். இந்தப் பட்டியலில்,* **பொல்லாத சிந்தனைகள்** *என்பது ஒன்றைத் தவிர பத்துக்கட்டளையில் இண்டாம் பகுதியில் வருகிற மற்ற எல்லாவற்றையும் குறிப்பிடுகிறார் - மனிதனுக்கும் மனிதனுக்குமிடையிலான காரியங்களை:* **கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்சாட்சிகளும், தூஷணங்களும்** *(யாத்திராகமம் 20:13-16).[22] இதே பாவங்கள் மற்ற வசனப்பகுதிகளிலும் புதிய ஏற்பாட்டில் கொண்டு வரப்படுகிறது (1 கொரிந்தியர் 6:9, 10; வெளிப்படுத்தின விசேஷம் 9:21; 21:8; 22:15). இயேசு மலைப் பிரசங்கத்தில் குறிப்பிடும்போது பாவங்கள் இருதயத்திலிருந்து தோன்றுகிறது என்று ஏற்கெனவே போதித்திருந்தார் (5:21-48).*

*வசனம் 20.* கர்த்தர் தமது விளக்கத்தை பின் வரும் வார்த்தைகளைச் சொல்லி நிறைவு செய்கிறார், **இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்; கை கழுவாமல் சாப்பிடுகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது** என்றார். உண்மையான சுத்தம், இயல்பில் ஆவிக்குரிய தன்மையாயிருக்கிறது: அது ஒரு மனுஷனுடைய இருதயத்தை உட்படுத்துகிறது - அவனுடைய சிந்தனைகள், உணர்வுகள், மனச்சாட்சி, விருப்பம் ஆகியவற்றைக் கொண்டது. இந்த மதிப்பீடு பரிசேயர்களின் சடங்காச்சார சுத்திகரிப்புக்கு முற்றிலும் எதிரிடையானதாக நிற்கிறது. கழுவாத கைகளைக் குறித்த இயேசுவின் நியாயத்தீர்ப்பு, அவருடைய சீஷர்களுக்கு எதிராக 15:2ல் கூறப்பட்ட குற்றத்திற்கே முழுவதுமாக சுற்றித் திரும்புகிறது மற்றும் மத்தேயுவின் கூற்றுப்படி, சிந்தனையின் ஒரு கூட்டாக அமைகிறது (15:1-20).[23]

✧✧✧✧✧ **பாடங்கள்** ✧✧✧✧✧

## பரலோகத்திற்கான பாதையில் அடைப்பு (அதிகாரம் 15)

இன்றைய உலகின் எண்ணங்களை நாம் தவிர்த்து நாம் பரலோகத்துக்குச் செல்லும் பாதையில் உள்ள அடைப்புகளையும் நீக்கிப் போட வேண்டும். அவைகளில் சிலவற்றை ஆராய்வோம்.

1. *மனிதப் பாரம்பரியம்* (15:1-9). தேவனுடைய சித்தத்திற்கு ஒத்துப்போகாத மனிதப் பாரம்பரியங்களை நாம் புறந்தள்ள வேண்டும். நமது ஆராதனையின் செயல்பாடுகளுக்கும் அவருடைய வசனத்தின்படி ஊழியஞ்செய்யவும் இருக்கிற ஒரே அதிகாரம் அவருடைய வசனம் மட்டுமே ("தேவன் சொல்லுகிறதாவது ..."), இயேசு பரிசேயர்களிடத்திலும் வேதபாரகரிடத்திலும், "நீங்களோ ... சொல்லுகிறீர்கள்" என்றார் (15:4, 5). அவர்கள் (தங்கள்) "பாரம்பரியத்துக்காக தேவனுடைய வார்த்தையை அவமாக்கிப் போட்டார்கள்" (15:6). ஏசாயாவின் வார்த்தைகளைப் பயன்படுத்தி, இயேசு அறிவித்ததாவது, "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" (15:9).

2. *கள்ளப் போதகர்கள்* (15:12-14). இயேசு சொன்னார், "என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்" (15:13). அவர், "குருடனுக்கு குருடன் வழிகாட்டுவதையும்" குறிப்பிடுகிறார் (15:14). வசன ஆதாரமில்லாத பிரசித்தமாய்ப் பேசப்படும் நம்பிக்கைகளுக்காக நாம் வேதாகம கற்பனைகளை விட்டு விடக் கூடாது.

3. *அசுத்தமான வாழ்க்கை* (15:10, 11, 17-20). "மனுஷனுடைய வாயிலிருந்து புறப்படுகிறவைகளே, மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" என்று இயேசு போதித்தார் (15:11); "வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டு வரும்; அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" (15:18). பிறகு ஒரு அசுத்தமான இருதயத்திலிருந்து புறப்பட்டு வருகிற தீட்டுப்படுத்தும் பாவங்களை வரிசைப்படுத்துகிறார்: "பொல்லாத சிந்தனைகள், கொலை பாதகம், விபச்சாரம், வேசித்தனம், களவுகள், பொய்சாட்சிகள், தூஷணங்கள்"

*(15:19).*

*4. அற்ப விசுவாசம் (15:21-28). கானானிய ஸ்திரீ தனது மகள் நிமித்தம் கொண்டிருந்த விசுவாசத்திலும் அன்பிலும் உறுதியாயிருந்ததினித்தம் பெரிய ஆசீர்வாதத்தைப் பெற்றாள், அவளுடைய விசுவாசம் "பெரியது" என பாராட்டப்பட்டாள் (15:28). அதற்கு முரணாக, அநேக யூதர்கள் இயேசுவின் போதகத்தையும் அற்புதங்களையும் தள்ளி விட்டார்கள். சில நேரங்களில், அவருடைய சொந்த சீஷர்கள் கூட "அற்ப விசுவாசிகள்" என்று சாட்டப்பட்டார்கள் (6:30; 8:26; 14:31; 16:8; 17:20).*

*5. நமது பலதரப்பட்ட வாழ்க்கை (15:32-39).* ஜனங்கள் இயேசுவையே நோக்கிப் பார்த்துக் கொண்டு அவரோடு கூட உணவைப் பற்றியோ ஓய்வைப் பற்றியோ கவலைப்படாமல் மூன்று நாட்கள் அவரோடு இருந்தார்கள். அவர்கள் ஆவிக்குரிய போஜனத்துக்காக பசியோடும் தாகத்தோடும் இருந்தார்கள். இயேசுவைப் பின்பற்றாதபடி நம்மைத் தடுப்பது ஏது? இந்த உலகக் காரியங்களை மனதில் வைத்து மிகச் சுலபமாக நமது குறிக்கோள்களை திசைத்திருப்பச் செய்யலாம்.

## பாரம்பரியம் (15:1-9)

குறிப்பிடத்தக்க வரலாற்று ஆசாரியனும் தத்துவஞானியுமாகிய Will Durant ஒருமுறை எழுதியதாவது, "பாரம்பரியம் என்பது காலத்தின் குரல், காலம் என்பது தெரிவு செய்து கொள்ளும் முறை; எச்சரிக்கையுள்ள மனம் அவைகளின் முடிவை மதிக்கும், இளைஞர்கள் மட்டுமே இருபது நூற்றாண்டுகளைக் காட்டிலும் சிறப்பாக அறிவார்கள்."[24]

மத்தேயு 15:1-9 சத்தியத்துக்கும் பாரம்பரியத்துக்கும் இடையேயான காலாகாலத்து முரண்பாடுகளை சிறப்புக் கூறுகளாகக் காட்டுகிறது, இயேசு தெய்வீக சத்தியத்திற்காக அக்கறை காட்டினார், ஆனால் அவருடைய சத்துருக்கள் தங்களுடைய மனித பாரம்பரியங்களில் அக்கறை காட்டினார்கள். இருந்த போதிலும், அவர் எல்லா பாரம்பரியங்களையும் கண்டனம் பண்ண வில்லை, அவர் சடங்காச்சாரமான கைகழுவுதலை புறக்கணித்தார். வேதாகமப் பதிவுகளின்படி, அவர் பஸ்காபண்டிகையில் குறைந்த பட்சம் மூன்று முறை பங்கு பெற்றார். அவர் ஜெப ஆலயத்துக்கு ஓய்வு நாள் தோறும் போவதைத் தமது "வழக்கமாகக் கொண்டிருந்தார்" (லூக்கா 4:16). அவர் எருசலேமுக்கு அருகில் வந்தபோது, அவர் தேவாலயத்தை பார்வையிட்டார். இவைகளில் சில நியாயப்பிரமாணத்தில் கட்டளையிடப்பட்டவைகள் தானே என்று தர்க்கம் பண்ணலாம், அது உண்மையாக இருந்தாலும், அவைகளும் மதப் பாரம்பரியங்களே.

நாம் எல்லா பாரம்பரியங்களையும் புறக்கணிக்க இயலாது, தேவனால் கொடுக்கப்பட்டவைகளை கைக்கொள்ளத்தான் வேண்டும் (1 கொரிந்தியர் 11:2; 2 தெசலோனிக்கேயர் 2:15; 3:6). மனுஷர்களால் கொடுக்கப்பட்டவைகளை, யாரையும் அவைகளால் கட்டுவிக்காவிட்டாலும், அவைகளை வைத்துக் கொள்வது மதிப்புள்ளதாயிருக்கலாம். மனுஷருடைய பாரம்பரியம் கொஞ்சம் மதிப்புடையதாக இருக்கலாம், ஆனால் அவைகள் பழங்காலத்தவை என்பதற்காக தள்ளிவிடக் கூடாது.

ஒரு பாரம்பரியத்தைக் கைக் கொள்வதிலே ஆபத்து இல்லை; மனித

பாரம்பரியங்களையே பிரமாணமாகக் காண்பதும், அல்லது தேவன் கொடுத்த கட்டளைகளை அனுசரிக்காமல் விட்டு விடுவதும்தான் ஆபத்து. மத்தேயு 15:1-9ல் இயேசுவின் அதிக அக்கறை பரிசேயர்கள் தங்களுடைய பாரம்பரியங்களை தேவனுடைய கற்பனைகளுக்கு மேலாக்க முயற்சித்ததுதான். எப்பொழுதெல்லாம் ஜனங்கள் அப்படிச் செய்தார்களோ, அப்பொழுதெல்லாம் அவர்கள் பாவகுற்றமுள்ளவர்களாய் இருக்கிறார்கள்.

## கைகளை கழுவுதல் (15:2, 11)

கிருமிகளின் இயல்பு என்ன என்பது இன்றைக்கு நமக்குத் தெரியும், எனவே நமது கைகளை சாப்பிடுவதற்கு முன் கழுவுவது ஞானமான காரியம்தான். இயேசு கைகளை கழுவுவதை கண்டனம் பண்ணவில்லை, அல்லது அப்படிச் செய்யத் தவறினால் வியாதிப்பட முடியாது என்றும் கருதவில்லை. ஒருவன் வியாதிப்படுவான் என்றும் தமது போதனையை அமல்படுத்த வில்லை. தனிப்பட்ட சுகாதாரத்துக்குப் பதிலாக சடங்காச்சாரமான சுத்திகரிப்பை யூதர்கள் ஆசரித்ததையே அவர் விவாதிக்கிறார்.

## வீணாண ஆராதனை (15:7-9)

தேவன் நம்முடைய உதட்டளவிலான ஆராதனையை விரும்புவதில்லை, மாறாக நமது இருதயப்பூர்வமான ஆராதனையை எதிர்பார்க்கிறார் (ரோமர் 10:9, 10), அவரை நமது முழு இருதயத்தோடும் அன்புகூருவதை விரும்புகிறார் (22:37), பாடுதலிலும், நாம் இருதயத்திலிருந்து பாடவேண்டும் (கொலோசெயர் 3:16), கீழ்ப்படிதல் இருதயப் பூர்வமானதாக இருக்க வேண்டும் (எபேசியர் 6:6), நமது (காணிக்கை) கொடுத்தலும் கூட இருதயத்திலிருந்து வர வேண்டும் (2 கொரிந்தியர் 9:7). “ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுதல்” நமது இருதயத்திலிருந்து வரவேண்டும் (யோவான் 4:23, 24).

உண்மையான ஆராதனைக்கு முரணான மதரீதியிலான சம்பிரதாயத்தைத்தான் இயேசு “வீணானது” என்று குறிப்பிட்டார். நாம் தேவனை எப்படித் தொழுது கொள்ள வேண்டும் என்பது முக்கியமில்லை என்று சிலர் கருதுகின்றனர். தேவனை அவர்கள் ஒரு தயாளக்குணமுடைய வராகமட்டும் பார்த்து ஆராதனை எனும் பெயரில் எதைச் செலுத்தினாலும் ஏற்றுக் கொள்வார் என்று எண்ணுகின்றனர். இது உண்மையல்ல என்பது தெளிவு (மல்கியா 1:7-9).

குறிப்பாக, இந்த மாய்மாலக்காரரின் ஆராதனை “வீணானது” (“பிரயோஜனமற்றது”; “விருதாவானது”). ஏனெனில் அவர்கள் “மனுஷருடைய கற்பனைகளையே உபதேசங்களாகப் போதித்தனர்” (15:9). இன்றைக்கும் அநேக மனித கற்பனைகள் போதிக்கப்படுகின்றன. அவைகளுக்கு தேவனுடைய வசனத்துக்கும் மேலான முதன்மைத்துவம் கொடுக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட கள்ள உபதேசத்தைப் பரப்புவோர் தேவனை வீணாக ஆராதிக்கின்றனர்.

## ஆராதனை (15:7-9)

“ஆராதனை” என்பது “பயபக்தியுடன் கூடிய அன்பும் தெய்வத்துக்கு

செலுத்தும் துதியுமாகும் ... ஆர்வத்துடன் கூடிய பக்தி செலுத்துதல்.”[25] விவரித்துச் சொல்ல வேண்டுமாயின் ஆராதனை என்பது தேவனை மையம் வைத்ததாக இருக்க வேண்டுமேயன்றி மனிதனை மையம் வைத்ததாக இருக்கக் கூடாது. தேவனும் அவருடைய குமாரனும் செய்த எல்லாவற்றிற்காகவும் செய்து கொண்டுள்ள எல்லாவற்றிற்காகவும் துதிகளைச் சொல்லுவது. “பிதாவே, உமக்கு நன்றி!” “இயேசுவே உமக்கு நன்றி! நீவீர் எங்களுக்கு மிகவும் நல்லவராக இருந்திருக்கிறீர்,” என்று சொல்லுவதற்கு நமக்கு கொடுக்கப்படுகிற ஒரு சந்தர்ப்பம் இது. ஆராதனை என்பது நாம் நல்லுணர்வைப் பெறும்படியான காரியமல்ல. தேவனை நோக்கியதாக இருக்கும் ஆராதனை, நிச்சயமாக ஆராதிப்பவரை அன்பினாலும், சந்தோஷத்தாலும் சமாதானத்தினாலும் நிறையச் செய்யும். ஆகிலும் இவைகள் நம்முடைய ஆவிக்குரிய பக்தியில் இடையில் கிடைக்கும் காரியங்கள்.

நாம் நேர்மையாக இருக்கும்வரை கூடிவரும் கூட்டத்துடன் நாம் எப்படி தேவனை ஆராதிக்கிறோம் என்பது முக்கியமல்ல என்று இன்று அநேகர் விசுவாசிக்கின்றனர், ஜனங்கள் இன்று ஆராதனையில் ஆராவார நடனங்களையும், நாட்டுப்புற ஆர்ப்பாட்டங்களையும் அல்லது வேறு விதமான இசை நிகழ்ச்சிகளையும் விரும்புவார்களானால், செய்து கொள்ளட்டும். தனி நபரை பாடவைத்து மகிழ்வதோ அவர்கள் விருப்பப்படி செய்யட்டும். ஆராதனையில் இசைக்கருவிகளை பயன்படுத்த அவர்கள் விரும்பினாலோ, அல்லது இசைக் கருவிபோன்று சத்தம் எழுப்பி ஆராதிப்பது, சரியென அவர்கள் நினைப்பார்களேயானால் சரி, செய்யட்டும். பிரசங்கம் செய்ய வேண்டிய நேரத்தில் (இடத்தில்) ஒரு நாடகத்தை அரங்கேற்ற விரும்புவார்களானால், அப்படியும் வைத்துக் கொள்ளட்டும். ஆராதனை என்பது பொழுதுபோக்கு நிகழ்ச்சியல்ல! அது ஜனங்களைப் பிரியப்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டதல்ல; தேவனைப் பிரியப்படுத்தும்படி திட்டமிடப்பட்டது.

தேவன் ஆரானைக்கென்று ஒரு திட்டத்தை எப்போதும் வைத்திருக்கிறார். இன்றைக்கு அப்படியொரு திட்டமில்லை என்று நினைப்பது தவறு. தேவன் காயீனிடத்திலும், ஆபேலிடத்திலும் தமக்கு அவர்கள் பலியிட வேண்டும் என்று தெளிவாகக் கேட்டிருந்தார் (எபிரெயர் 11:4) ஆபேல் அதற்கு கீழ்ப்படிந்தான், ஆனால் காயீனோ தனது மனதில் தீர்மானித்தபடி காணிக்கை செலுத்துவதைத் தெரிந்து கொண்டான். தேவன் ஆபேலின் காணிக்கையை ஏற்றுக் கொண்டார், காயீனுடைய காணிக்கையை புறக்கணித்தார் (ஆதியாகமம் 4:3-7). நாதாபும் அபியுவும், ஆசாரியர்களாயிருந்த ஆரோனின் இரண்டு குமாரர்கள் (யாத்திராகமம் 24:9, 10), தேவன் அவர்களுக்குக் கட்டளையிடாத, அந்நிய அக்கினியை பயன்படுத்தினதற்காக வானத்திலிருந்து இறங்கி வந்த அக்கினி அவர்களைப் பட்சித்துப் போட்டது (லேவியராகமம் 10:1, 2). பலிபீடத்து தூப வர்க்கத்தைப் பற்றவைக்க தூபகலசத்திலிருந்து பலிபீட அக்கினியாக பெற வேண்டும் என்பது தேவனுடைய தெளிவான கட்டளை, அநேக வேத நிபுணர்கள் இதை அவர்கள் செய்யவில்லை என்பதை ஒப்புக் கொள்கின்றனர். “அந்நிய அக்கினி” என்று எதைக் குறிப்பிட்டிருந்தாலும், அது, தேவன் குறிப்பிட்ட திட்டத்தின்படி மோசேயின் யுகத்தின் ஆராதனையின் ஒரு பகுதியல்ல என்று பொருள்; தங்களுடைய கீழ்ப்படியாமைக்கு மிக உயர்ந்த கிரயத்தை நாதாபும் அபியூவும் செலுத்தினார்கள். அங்கீகரிக்கப்பட்ட

அப்போஸ்தலரின் கால முன் உதாரணத்திலிருந்து ஆதித்திருச்சபை எப்படி தேவனை தொழுது கொண்டது என்பதை அறிகிறோம் (காண்க நடபடிகள் 2:42; 20:7; 1 கொரிந்தியர் 11:20-34; 14:15; 16:2). ஏவப்பட்ட மனுஷர்களின் வழிகாட்டலின் கீழ் ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும், பாட்டு பாடி, ஜெபித்து, காணிக்கையளித்து, கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்று தேவனுடைய வசனத்திலிருந்து செய்தியைக் கேட்டு தேவனை ஆராதித்தார்கள் என்றால், அந்த முன் மாதிரியை மாற்றியமைக்க நமக்கு உரிமையளித்தது எது?

"உண்மையாய் தொழுதுகொள்ளுகிறவர்கள் ... [தேவனை] ஆவியோடும் உண்மையோடும்" தொழுது கொள்ள வேண்டும் என்று இயேசு சொன்னார் (யோவான் 4:23, 24). "உண்மையோடு" தொழுது கொள்ளுதல் என்பது தேவனுடைய வசனமாகிய சத்தியத்தின் பிரகாரம் (யோவான் 17:17), ஆவியோடும் என்பது (உள்ளான மனுஷனாகிய) சுபாவ இயல்போடு.[26] வெளித்தோற்றமான உணர்ச்சிவசப்பட்டு அல்ல (மல்கியா 1:6-14). நாம் எப்படி ஆவியோடு தொழுது கொள்ளக் கூடும்? முதலாவதாக, நமது சிந்தனைகள் தேவனை மையப்படுத்தினதாக இருக்க வேண்டும். இரண்டாவதாக, போதிக்கப்படுகிற சத்தியத்தின் மீது தியானம் செய்ய வேண்டும். மூன்றாவதாக, தேவனைப் பிரியப்படுத்துகிற ஆர்வமிருக்க வேண்டும். நான்காவதாக, நமது ஆராதனை நேர்மையானதாக இருக்க வேண்டும். நாம் பாடுவதற்கான சிறந்த குரல் வளம் இல்லை என்கிற சாக்கு போக்குச் சொல்லலாம் அல்லது சாதுரியமான ஜெபம் செய்ய இயலாமல் இருக்கலாம், ஆகிலும் நம்மை நேர்மையற்றவர்களாக அனுமதிக்கக் கூடாது.

தேவன் தவறான ஆராதனையை, சுய இஷ்ட ஆராதனையை, வீணான ஆராதனையை, மற்றும் சுயமான ஆராதனையை கண்டனம் பண்ணுகிறார். எல்லா ஆராதனைகளையும் தேவன் ஏற்றுக் கொள்வதில்லை என்பது தெளிவு. தேவனை நோக்கியதாக இல்லாத ஆராதனை ஏற்புடையதல்ல, நமது சொந்த மதிப்பீட்டின்படி செய்யும் தொழுகை, நம்மிடத்தில் உள்ள சிறந்தவைகளை நாம் தேவனுக்கென்று கொடுக்காதபோது அவர் நம்மை செய்யச் சொன்னவைகளை செய்யாமல் விட்டுவிடும்போது, அல்லது தேவன் சொன்ன கட்டளைகளுக்கு மேலாக சுய ஆராதனை முதன்மைத்துவம் கொடுக்கப்படும்போது அவை ஏற்புடையவையல்ல.

## நாம் யாருக்கு செவி கொடுப்பது (15:12-14)

இயேசுவின் சீஷர்கள் பரிசேயர்களின் கருத்துக்களுக்கு மிக அதிகமாகவே அக்கறை காட்டினர், அநேக யூதர்களால் அவர்கள் மிக அதிகமாக மதிக்கப்பட்டதால் அப்படி நடந்தது. இருந்த போதிலும், இயேசு தம்மை பின்பற்றினவர்களிடம், "அவர்களை விட்டு விடுங்கள், அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடர்களாயிருக்கிறார்கள்" (15:14) என்றார். இந்த கள்ளப் போதகர்களை பின்பற்றுவது ஒருவரது சுய அழிவுக்கு வழி வகுக்கும். இன்று, நாமும் கூட, கள்ளப்போதகர்களைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் மற்றும் அடுத்தவர் போதனை தேவனுடைய வசனத்துடன் மதிப்பிடப்படவேண்டும். கிறிஸ்தவ விசுவாசத்துக்கு அதுமட்டுமே சாதகமான மதிப்பீடு.

டேவிட் ஸ்டீவர்ட்

குறிப்புகள்

[1]*அந்தியோகஸ் (தன்னை "எபிபானேஸ்" என்று அழைத்துக் கொண்டான், அதன் பொருள் "தேவ சாட்சி"), செலிசிட் சாம்ராஜ்யத்தில் கி.மு இரண்டாம் நூற்றாண்டில் ஆட்சி செய்தான். பலஸ்தீனாவை வெற்றி கொண்டது போன்ற அவனுடைய செயல்கள் யூதர்களுக்கு மிகவும் இடறுதலாய் இருந்தது. எனவே மெக்காபிய புரட்சியை ஏறத்தாழ கொண்டு வந்திருந்தனர்.* [2]David Hill, *The Gospel of Matthew*, The New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972), 250. [3]Leon Morris, *The Gospel according to Matthew*, Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 389. [4]Mishnah *Aboth* 1.1. [5]Ibid. [6]Robert H. Mounce, *Matthew*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 148. [7]Josephus *Antiquities* 13.10.6 (*வலியுறுத்தல் சேர்க்கப்பட்டுள்ளது).* [8]*"பஞ்சாகமத்தின் போதனைகளுக்கு மேலாக (முதல் ஐந்து புத்தகமாகிய தோரா) வேதபாரகரின் போதனைகளுக்கு அதிகக் கண்டிப்பான விதிகள் கொடுக்கப்பட்டன"* (Mishna *Sanhedrin* 11.3; Talmud *Abodah Zarah* 35a; *Erubin* 21b *காண்க*). [9]Morris, 391. [10]Mishna *Yadaim* 2.3.

[11]Micheal J. Wilkins, "Matthew," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary,* vol. 1, *Matthew, Mark, Luke,* ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), *95. ரபீ ஒருவர், "அழுக்கான மனிதன் தேவாலய பணிக்குத் தகுதியற்றவன், அதே போல அழுக்கான கையுடைய ஒருவன் நன்றி செலுத்துவதற்கு தகுதியற்றவன்"* (Talmud *Berakoth* 53b). [12]Talmud *Kiddushin* 31b; Jerusalem Talmud *Kiddushin* 1.7. [13]Jerusalem Talmud *Kiddushin* 1.7. [14]Mishnah *Nedarim* 5.6. [15]Wilkins, 96. [16]Mishnah *Nedarim* 9.1 [17]Hill, 251. [18]William Hendriksen, *New Testament Commentary: Exposition of the Gospel According to Matthew* (Grand Rapids, Mich.: Baker Book House, 1973), 614. [19]Craig S. Keener, *A Commentary on the Gospel of Matthew* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1999), 412. [20]Jack P. Lewis, *A Commentary on the Gospel According to Matthew,* Part 2, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 25.

[21]Morris, 396-97. [22]*"வேசித்தனங்கள்" என்பது "விபச்சாரத்தோடும்," "தூஷித்தல்" "பொய் சாட்சியோடும்" கூட்டிப் பேசப்படுகிறது.* [23]Hill, 252. [24]Will Durant, *The Story of Civilization*, vol. 3, *Caesar and Christ* (New York.: Simon and Schuster, 1944, 1972), 295. [25]*American Heritage Dictionary,* 4th ed. (2001), s.v. "worship." [26]*யோவான் 4ன் உட்கருத்து உண்மையான ஆராதனை என்பது குறிப்பிட்ட இடத்தில் தியானிக்கப்படுவது அல்ல (எருசலேமோ அல்லது கெர்சீம் மலையிலோ அல்ல), ஆனால் ஒரு நபர் மூலமாக (இயேசு கிறிஸ்து மூலமாக) நடக்கிறது, உண்மையான, ஆவிக்குரிய ஆராதனை அவர் மூலமாக மட்டுமே சாத்தியமானது (யோவான் 14:6, 13, 14; 16:23, 24; எபேசியர் 5:19, 20; கொலோசெயர் 3:16, 17).*